# களனி பல்கலைக்கழகம்

# வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்காக 2026 ஜுன் 22ஆம் திகதி வரை பொருத்தமான தகைமை வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை களனி பல்கலைக்கழகம் கோருகின்றது.

01. **பதவி: முகாமைத்துவ உதவியாளர் - (ஒப்பந்தம்)**
**Management Assistant (Contract)**

அடிப்படைச் சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ரூபா 64,213.00 ரூபா மாதாந்த சம்பளம் வழங்கப்படும். பல்கலைக்கழக விதிகள் மற்றும் சுற்றுநிருபத்தின் பிரகாரம் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் ஏற்புடையதாகும்.

பல்கலைக்கழக சேமலாப நிதியம் (UPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புகளைப் பெற உரிமை உண்டு.

வயதெல்லை: விண்ணப்பங்கள் முடிவுறுத்தப்படும் இறுதி நாளில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

02. **பதவி: தொழிலாளர் - (ஒப்பந்தம்)**
**Labourer (Contract)**

அடிப்படைச் சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ரூபா 58,563.00 ரூபா மாதாந்த சம்பளம் வழங்கப்படும். பல்கலைக்கழக விதிகள் மற்றும் சுற்றுநிருபத்தின் பிரகாரம் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் ஏற்புடையதாகும்.

பல்கலைக்கழக சேமலாப நிதியம் (UPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புகளைப் பெற உரிமை உண்டு.

வயதெல்லை: விண்ணப்பங்கள் முடிவுறுத்தப்படும் இறுதி நாளில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**குறிப்பு:**

- தொழிலாளராக தோட்டம் / வெளிக்களம் / தள வேலைகளில் அனுபவம் வாய்ந்த நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- நியமிக்கப்படும் நபர் பொறுப்பாளர் மற்றும் பல்கலைக்கழகத்தின் தோட்டத்தின் கீழ் சேவையாற்ற வேண்டும்.

ஆணைக்குழு/ உயர்கல்வி நிறுவனம்/ நிறுவனங்களில் எந்தவொரு பதவிக்கும் நியமிப்பதற்கு தகுதியற்ற நபர்கள்

(அ) பொதுத் திறமையின்மை காரணமாக கட்டாயமாக ஓய்வு பெற்றவர் அல்லது பணிநீக்கத்திற்கு மாற்றாக கருணை அடிப்படையில் ஓய்வு பெற்றவர் அல்லது முறையான விசாரணைக்குப் பிறகு ஒழுக்காற்று காரணங்களுக்காக சேவையிலிருந்து விலக்கப்பட்டவர் அல்லது பதவிநீக்கம் செய்யப்பட்டவர்.

(ஆ) அரசுப் பணியில் இருந்தபோது அல்லது பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது நியதிகள் சட்ட சபையில் பணியாற்றியபோது அல்லது ஆணைக்குழு அல்லது ஏதேனும் உயர்கல்வி நிறுவனம்/ நிறுவனத்தில் பணியாற்றியபோது பதவியை துறந்தவர்.

(இ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசிற்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றச் செயலுக்காக நீதிமன்றத்தால் தண்டனை பெற்றவர்.

(ஈ) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 449ஆம் பிரிவின் பிரகாரம், எந்தவொரு குற்றவியல் நடவடிக்கையிலும் நீதிமன்றத்தால் தண்டனை பெற்றவர் அல்லது சுருக்கமான விசாரணைக்குப் பிறகு நீதிமன்றத்தால் தண்டனை பெற்றவர்.

(உ) கடன் தீர்க்கமுடியாதவராக அறிவிக்கப்பட்டவர், ஆணைக்குழு அல்லது ஏதேனும் உயர்கல்வி நிறுவனம்/ நிறுவனத்திலோ எந்தப் பதவிக்கும் நியமிக்கப்படக்கூடாது. இருப்பினும், விதிவிலக்கான சூழ்நிலைகளில் மேலே உள்ள (அ) மற்றும் (ஆ) பிரிவுகளில் உள்ளவர்கள் ஆணையகுழுவின் முன் ஒப்புதலுடன் நியமனத்திற்கு பரிசீலிக்கப்படலாம்.

இலங்கைப் பிரஜைகள் அல்லாத நபர்கள் ஆணைக்குழு/ உயர்கல்வி நிறுவனம்/ நிறுவனங்களில் எந்தப் பதவிக்கும் நியமிக்கப்படக்கூடாது.

**எவ்வாறு விண்ணப்பிப்பது:**

பல்கலைக்கழக இணையதளத்தில் (services.kln.ac.lk) வெளியிடப்பட்டுள்ள மேலதிக விபரங்களுடன் கூடிய விளம்பரத்தைப் பார்க்கவும் மற்றும் விண்ணப்பப் படிவங்களை பதிவிறக்கம் செய்யவும் முடியும். பரிந்துரைக்கப்பட்ட படிவங்களில் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கடித உறையின் மேல் இடது மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / கல்விசாரா நிறுவனப் பிரிவு, களனி பல்கலைக்கழகம், தளுகம, களனி என்ற முகவரிக்கு 2026 ஜுன் 22ஆம் திகதிக்கு முன் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

மேற்கண்ட அனைத்து பதவிகளுக்கும் அல்லது பேரவையின் திருப்திப்படுத்தப்படும் காரணத்திற்காக, அபேட்சகர்களை குறும் பட்டியலிடவும் / அல்லது ஆட்சேர்ப்பு செய்யாமல் இருக்கவும் பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு. இது தொடர்பில் பேரவையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்யாத, தொடர்புடைய தகுதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படாத, முழுமையற்ற, தெளிவற்ற மற்றும் இறுதித் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**களனி.**

2026-05-29.